RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 74 | மார்ச்.23 2026 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# நீண்ட காலம் பதவி வகித்த தலைவர்; பிரதமர் மோடிக்கு குவியும் பாராட்டுகள்

புதுடில்லி: மார்ச்.23-

இந்திய அரசாங்கத்தில் நீண்ட காலம் பதவி வகித்த தலைவர் என்ற புதிய சாதனையை பிரதமர் மோடி படைத்துள்ளார். அவரின் இந்த சாதனைக்கு நாடு முழுவதும் உள்ள அரசியல்கட்சிகள் தலைவர்கள், சமூக அமைப்பினர் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்து வருகின்றனர்.

பிரதமர் மோடி, குஜராத்தில் முதல்வராக 2001ல் பதவி ஏற்றார். அதன் பின்னர், 2014ம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக 3வது முறையாக நாட்டின் பிரதமராக பதவி வகித்து வருகிறார். இதன் மூலம் அரசாங்கத்தில் அவர் 8931 நாட்கள் வரையில் நீண்ட காலம் தலைவராக பதவி வகித்தவர் என்ற புதிய சாதனையை படைத்து இருக்கிறார்.

இதற்கு முன்னர் சிக்கிம் முன்னாள் முதல்வர் பவன்குமார் சாம்லிங் நீண்ட நாட்கள் அரசாங்க பதவி வகித்த தலைவராக இருந்தார். அவர் மொத்தம் 8930 நாட்கள் அரசு பதவியில் இருந்தார்.

பிரதமர் மோடியின் இந்த சாதனையை ராணுவ அமைச்சர் ராஜ்நாத்சிங் பாராட்டி உள்ளார்.



இதுகுறித்து அவர் தமது எக்ஸ் பதிவில் கூறி உள்ளதாவது; பிரதமர் மோடி, தற்போது இந்தியாவில் மிக நீண்ட காலம் அரசு தலைவராக பணியாற்றியவர் என்ற பெருமையை பெற்று இருக்கிறார். நாடு மற்றும் மக்களின் மீது அவர் கொண்டுள்ள தூய்மையான அர்ப்பணிப்பையே இது காட்டுகிறது. குஜராத் முதல்வராக இருந்த காலம்தொட்டே அவரின் தன்னிகரில்லாத உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புமிக்க தலைமை, பிரதமர் மோடி வாழ்க்கையில் இடைவிடாத சேவையை அளிக்கும் பயணமாக அமைந்துள்ளது.

சிக்கிம் முன்னாள் முதல்வர் பவன்குமார் சாம்லிங் படைத்திருந்த 8930 நாட்கள் என்ற சாதனையை முறியடித்து, வரலாற்றில் சிறப்புமிக்க மைல்கல்லை எட்டியிருக்கிறார். அரசு பதவியில் 8931 நாட்கள் என்ற இத்தருணம், நாடே தமக்கு முதன்மை என்ற கொள்கையை அடிப்படையாக கொண்டு அரசு நிர்வாகம், செயலில் நேர்மை, நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் ஆற்றும் அயராத சேவை ஆகியவை மீதான அவரின் ஆழ்ந்த அர்ப்பணிப்பை எதிரொலிக்கிறது.இந்த சிறந்த சாதனையை படைத்த பிரதமர் மோடிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்.இவ்வாறு ராணுவ அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறி உள்ளார்.

## அங்கீகரிக்கப்பட்ட ஓஆர்எஸ் கரைசல் மட்டுமே நீர்ச்சத்து இழப்பை தடுக்கும்

### சுகாதாரத் துறை அதிகாரிகள் தகவல்

சென்னை, மார்ச்.23-

'உலக சுகாதார நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஓஆர்எஸ் கரைசல் மட்டுமே உடலில் நீர்ச் சத்து இழப்பை தடுக்கும்' என்று சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரி வித்தனர்.



வயிற்றுப் போக்கு, நீர்ச்சத்து இழப்பு பிரச்சினைக்கான சிகிச்சைக்கு உப்பு சர்க்கரை கரைசல் (ஓஆர்எஸ்) முக்கிய பங்கு வகிக்கிறது. அதிக வியர்வை வெளியேறுதல், வயிற்றுப் போக்கு சமயத்தில் உடலில் இருந்து குளுக்கோஸ் மற்றும் அத்தியாவசிய உப்புகள் குறை கிறது. இதற்கு உடனடியாக சிகிச்சை பெறாவிட்டால் உள் உறுப்புகள் பாதிப்பும், உயிரிழப் பும் ஏற்பட வாய்ப்புள்ளது.

நீரில் கலந்து பருக வேண்டும்: உலக சுகாதார நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட உப்பு சர்க் கரை கரைசலை பயன்படுத்து வதன் மூலம் உடலில் நீர்ச் சத்து இழப்பை தடுக்க முடியும். 20.5 கிராம் எடையுள்ள உப்புசர்க்கரை கரைசல் பாக்கெட் டில் 2.6 கிராம் சோடியம் குளோரைடு, 13.5 கிராம் குளுக் கோஸ், 1.5 கிராம் பொட்டாசி யம் குளோரைடு, 2.9 கிராம் ட்ரைசோடியம் சிட்ரேட் ஆகி யவை உள்ளன. நன்கு கொதித்து ஆறிய ஒரு லிட்டர் தண்ணீரில் ஓஆர்எஸ் கரைசலை கலந்து 24 மணி நேரத்துக்குள் பருக வேண்டும்.

பல்வேறு பெயர்களில் பானங்கள்: அதேநேரம், திரவ நிலையில் உப்பு சர்க்கரை கரைசல் பானங்கள் பல்வேறு பெயர் களில் தற்போது விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அந்த பானங்கள் உடலுக்கு புத்துணர்ச்சியை மட்டுமே தரக் கூடும்.

அதில் உள்ள தாது உப்புகள், குளுக்கோஸ் ஆகியவை உலக சுகாதார நிறு வனம் அறிவுறுத்திய வகையில் இல்லாததால், அதனை பருகுவதால் மருத்துவ ரீதியாக நீர்ச்சத்து இழப்பை சரி செய்ய முடியாது.

உலக சுகாதார நிறுவனம் அங்கீகரித்த உப்பு சர்க்கரை கரைசல் பாக்கெட்டுகள், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவ மனைகளில் இலவசமாகவும், தனியார் மருந்தகங்களில் குறைந்த கட்டணத்திலும் வழங்கப்படுகிறது. உடலில் நீர்ச்சத்து இழப்பை தடுக்க, அதனை மட்டும் பயன்படுத்த வேண்டும் என்று சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரி வித்தனர்.

## காரைக்கால் தெற்கு பாஜக வேட்பாளராக அருள்முருகன் அறிவிப்பு!

புதுச்சேரி: மார்ச்.23-

புதுச்சேரியில் பாஜக போட்டியிடும் 10வது தொகுதியான காரைக்கால் தெற்கு வேட்பாளராக அருள்முருகன் அறிவிக்கப்பட்டுள்ளார்.

புதுச்சேரியில் என்டிஏ கூட்டணியில் என்ஆர்காங்கிரஸுக்கு 16 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. மீதமுள்ள 14 தொகுதிகளில் 10 தொகுதிகள் பாஜகவுக்கும், அதிமுக, லஜகவுக்கு தலா 2 தொகுதிகளும் ஒதுக்கப்பட்டன. அதையடுத்து பாஜக 9 தொகுதி வேட்பாளர்களை அறிவித்தது. பத்தாவது தொகுதியான காரைக்கால் தெற்கு வேட்பாளராக மாநில தலைமை செய்தி தொடர்பாளர் அருள்முருகனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய பொதுச்செயலர் அருண்சிங் இந்த அறி விப்பை வெளியிட்டார்.



இதைத்தொடர்ந்து அருள்முருகனுக்கு கட்சியின் அதிகாரப்பூர்வ தேர்தல் படிவங்களை இன்று அளித்தனர்.

என்டிஏ கூட்டணியில் அறிவித்து பத்து தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அதிகாரப்பூர்வமாக பாஜக மட்டுமே அறி வித்துள்ளது. இதில் அறிவிப்புக்கு முன்பாகவே அமைச்சர் நமச்சிவாயம், பேரவைத்தலைவர் செல்வம் உள்ளிட்டோர் மனுதாக்கல் செய்து விட்டனர். மீதமுள்ளோர் நாளை மனுதாக்கல் செய்கின்றனர்.

## திமுக கூட்டணியில் இருந்து தவாக விலகல் : வேல்முருகன் அறிவிப்பு

சென்னை: மார்ச்.23-

திமுக கூட்டணியிலிருந்து தமிழக வாழ்வுரிமை கட்சி விலகுவதாக அக்கட்சியின் தலைவர் வேல்முருகன் அறி வித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களை சந்தித்த தவாக தலைவர் வேல்முருகன், “2019 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் முதல் திமுக கூட்டணியில் இடம்பெற்று மதசார்பற்ற சக்திகளோடு கூட்டணியில் பயணித்து வந்தோம். இந்தச் சூழலில் திமுக பேச்சு வார்த்தைக்குழுவுடன் முதல் கட்ட பேச்சு வார்த்தையில் ஈடுபட்டோம். அதில் எங்களுக்கு ஒரு இடத்தை ஒதுக்குவதாக திமுக தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அப்போது நாங்கள் ஒரு இடத்தை எங்களால் ஏற்க முடியாது என்றும், கூடுதல் இடங்கள் ஒதுக்க வேண்டுமென்றும் கோரிக்கை வைத்தோம். மேலும், தமிழக மக்களின் நலனுக்கான திமுக அரசிடம் 10 அம்ச கோரிக்கைகளை முன்வைத்தோம். எங்கள் கோரிக்கைகளை அரசு பொருட்படுத்தவில்லை. இதனால் திமுக கூட்டணியில் இருந்து தவாக விலகுகிறது.” என்றார்.



தொடர்ந்து பேசிய அவர், “நாங்கள் 10 அம்ச கோரிக்கைகளை முன்வைத்ததை திமுகவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதனால் பெரியண்ணன் மனநிலையில், திமுக எங்களை புறக்கணித்தது. அதேபோல, நான் திமுக கூட்டணியில் இருப்பதை தமிழரல்லாத, தமிழர் விரோத அதிகாரிகள் விரும்பவில்லை. எனவே என்னை திமுக கூட்டணி யிலிருந்து வெளியேற்ற அவர்கள் திட்டமிட்டனர். இதனால் தமிழர் விரோத அதிகாரிகளின் பேச்சைக் கேட்டு திமுக தலைமை தவாகவை புறக்கணித்துள்ளது.

சமூக நீதி இயக்கமான திமுக ஏன் தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு எடுக்க மறுக்கிறது. வன்னியர்களுக்காக 10.5 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் நடவடிக்கையை தடுத்த சக்தி எது?. தமிழக வேலை தமிழருக்கே என்ற சட்டத்தை திமுக அரசு நிறைவேற்றாதது ஏன்?. தமிழ் படித்தோருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை என்பது இன்னும் இங்கே சட்டமாகவில்லை.

கார்ப்பரேட்டுகளுக்கு ஆதரவாக உள்ள சக்திகள் முதல்வர் ஸ்டாலினை சுயமாக சிந்தித்து முடிவெடுக்க விடாமல் மறுத்து, அதிகாரிகள் கொட்டமடிக்கிறார்கள் என நான் சொன்ன குற்றச்சாட்டுகளால் இப்போது தேர்தல் களத்திலும் எனக்கு நெருக்கடி கொடுக்கிறார்கள்.

தவாக நிர்வாகிகளுடன் நடத்திய ஆலோசனையின் அடிப்படையில், தமிழக வாழ்வுரிமை கட்சி, திமுக கூட்டணியிலிருந்து விலகுவதாக அதிகாரப்பூர்வமாக தெரிவிக்கிறேன். எங்களின் 10 அம்ச கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் கட்சியுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்திப்போம்.

அதேபோல், நாட்டை மதத்தின் பெயரால் பிளவுப்படுத்தும் பாஜக தலைமையிலான என்டிஏ கூட்டணியில் தவாக இடம்பெறாது என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கிறேன். எனவே எங்கள் கட்சி நிர்வாகிகளுடன் கலந்தாலோசித்து எங்கள் கோரிக்கைகளை ஏற்கும் கட்சியுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்திப்போம். 25க்கும் மேற்பட்ட சிறிய கட்சிகள், தமிழ்த் தேசிய அமைப்புகள் எங்களுடன் ஆலோசித்து வருகின்றன. அவர்களின் கருத்தை கேட்டு கூட்டணி குறித்து முடிவெடுப்போம்” என்றார்.

## “நான் ஆசியாவின் பக்கம்” மேற்காசிய போர் குறித்து கமல்ஹாசன் கருத்து

சென்னை: மார்ச்.23-

அமெரிக்கா இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போர் குறித்து மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் தனது கருத்தை தெரி வித்துள்ளார். இது குறித்து சமூக வலைதளப் பதிவில் அவர் பதிவிட்டுள்ளார். அதில் கூறியுள்ளதாவது:



“செம்மஞ்சள் பிழம்பு. எண்ணெய்க் கிடங்குகள் வெடித்து ஆரஞ்சு அக்னி மேகமாய்க் கொப்பளிக்கும் யூடியூப் வீடியோ பார்த்து ‘அடேங்கப்பா! போட்டாம் பாரு’ என்று, யாரோ கிரிக்கெட்டில் சிக்ஸர் அடித்தது போல் ஆர்ப்பரிப்பவரிடம், நீங்கள் எந்தக் கட்சி அமெரிக்காவா, ஈரானா? என்ற கேள்விக்கு, ‘நான் இந்தியன், நான் பார்வையாளன்’ என விம்முகிறார்.

இந்தியா தீவல்ல ஆசியத் துணைக்கண்டம் என்று புரியவைக்கும் என் வாக்கியம் முடியும் முன், ‘நான் ஹிந்து. இது ஹிந்துஸ்தான். இந்தப் பெயரை ஒத்துக்கொண்டு சூட்டியது இஸ்லாமிய முகலாய மன்னர்’ என்று அந்த நண்பர் இடைமறிக்கிறார்.

முகலாய முஸ்லீமை, மன்னர்களை, 500 ஆண்டுகள் ஏற்றுக்கொண்ட பெரும்பான்மையைச் சேர்ந்த இவர்கள் நிச்சயமாக சத்ரபதி சிவாஜியின் நேரடி வாரிசுகளல்லர்; நாளை இந்திய எண்ணெய்க் கிடங்கிற்கு வரப்போகும் ஆபத்து புரியாதவர்கள். அவர் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் மதம், என்னை வியப்பில் ஆழ்த்தவில்லை. அவர் அறியாமையை வியப்பதோடு, அது என்னைப் பதற்றத்திற்கும் உள்ளாக்குகிறது.

நடந்துகொண்டிருக்கும் இந்தப் போர், நாளை வலுத்துவிட்டால் இவர்கள் தன் மிடில் கிளாஸ் பங்கரில் ஒளிந்துகொண்டு (கீமி திமி வேலை செய்யும் வரை), ‘ஆட்சியாளர் என்ன செய்கிறார்? என் ராணுவம் என்ன செய்கிறது?’ என ட்வீட்டிவிட்டு, ஏதாவது லாரி டயர் வெடித்தால்கூட பயந்து பதுங்கப் போய்விடுவார்கள்.

நம் ராணுவ வீரர்கள் பலர் வீண் போரில் மடிந்த பின் ‘சாரே ஜஹான்ஸே’ பாட, மலர் வளையத்துடன் மனித நேயர்கள் என்ற விலாசத்துடன் தலைகாட்டுவார்கள். பாமரர்களும் பாதசாரிகளும் உழைப்பவர் வர்க்கமும், பெரும் கார்ப்பரேட் வியாபாரிகள் போல் எவன் எக்கேடு கெட்டால் என்ன என்று லாப நாமாவளி பாடிவிடக் கூடாது.

ஊரான் வீடு பற்றி எரியும் போது தீயணைக்க உதவுவது தியாகம் அல்ல, மனித நேயம். அதையும் தாண்டி, வாழும் வீதியோ ஊரோ பற்றியெரியக் கூடாது என்ற அடிப்படைத் தற்காப்பு. அரபு எண்ணெய்க் கிடங்குகளின் வாயு நம் அடுப்புக்கும் வாகனங்களுக்கும் உதவுகிறது.

கிலாஃபத் இயக்கம் என்று பேசிய போது காந்தியாரைக் கிண்டலடித்தவர்களின் பேரப்பிள்ளைகள் இன்னமும் உயிரோடுதான் இருக்கிறார்கள். அவர்கள் நீடூழி வாழட்டும். கூடவே ஈரானும் ஊரானும் வாழட்டும்.

அடுத்த முறை ஆரஞ்சுப் பிழம்பு பார்க்கத் துடிப்பவர்களுக்கு தீபாவளியே போதுமானது. அதையும் தாண்டி அடுத்த மாத நெல் விதைப்புக்கான உரம் பற்றியும், அதற்கு அடுத்த வருடம் பற்றியும் சிந்திக்க வேண்டும். உலகுக்குத் தேவையான 70 விழுக்காடு உரம், ஃபாஸ்ஃபேட் எல்லாம் சீனாவிலும் சில வளைகுடா நாடுகளிலும் முடங்கிக் கிடக்கின்றன. பெட்ரோலியம், உரமோ பாசனமோ செய்ய பெரிதாக உதவாது. நம் உழவருக்கு மட்டுமல்ல அமெரிக்க உழவனுக்கும்தான்.

ஊடகத்தில் கிண்டல் மட்டும் அடிக்கும் அறியாமை, போருக்கோ நாட்டிற்கோ உதவாது. ‘போர் செல்லும் வீரன் ஒரு தாய் மகன்தான். நம்மில் யார் இறந்தாலும் ஒரு தாய் அழுவாள்’ (விஸ்வரூபம் படத்தில் நான் எழுதிய பாடல்) அது இந்தியத் தாயாக இருக்கவே கூடாது. நான் ஆசியாவின் பக்கம். வாழ்க இந்தியா” என்று தெரி வித்துள்ளார்.

கடந்த மாதம் 28ம் தேதி அன்று ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் இணைந்து கூட்டு தாக்குதல் நடத்தின. அதற்கு பதிலடி தரும் வகையில் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்காவின் ராணுவ தளங்கள் மற்றும் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் மேற்காசியாவில் போர் மூண்டு, கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



## பாதுகாப்பு படையினர் விழிப்புணர்வு பேரணி



சேத்துப்பட்டு, மார்ச். 23-

சேத்துப்பட்டு மற்றும் தேவிகாபுரம் பகுதிகளில் வாக்காளர்கள் அச்சமின்றி வாக்களிப்பதை உறுதிசெய்யும் வகையில், மத்திய தொழில் பாதுகாப்புப் படையினர் சார்பில் விழிப்புணர்வு அணிவகுப்பு பேரணி நேற்று நடைபெற்றது.

தமிழக சட்டசபை தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தேர்தல் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மத்திய பாதுகாப்புப் படையினர் அனுப்பப்பட்டுள்ளனர்.

அதன்படி, போளூர் டிஎஸ்பி மனோகர் தலைமையில், சேத்துப்பட்டு இன்ஸ்பெக்டர் குணபாலன் ஆகியோர் முன்னிலையில், 100க்கும் மேற்பட்ட மத்திய தொழில் பாதுகாப்புப் படையினர் மற்றும் போலீசார் இணைந்து தேவிகாபுரம் மற்றும் சேத்துப்பட்டு பகுதிகளில் உள்ள முக்கிய சாலைகள் மற்றும் வீதிகள் வழியாக அணிவகுப்பு பேரணியாக சென்றனர்.

இந்த பேரணியில் சேத்துப்பட்டு போலீசார், ஆயுதப்படை போலீசார் உட்பட பலர் கலந்து கொண்டனர். வாக்காளர்கள் எந்தவித அச்சமும் இன்றி தங்கள் வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும் என்பதைக் குறிப்பிடும் வகையில் இப்பேரணி நடத்தப்பட்டது.

## பழனியில் சட்டவிரோதமாக விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 700 மது பாட்டில்கள் பறிமுதல்



பழனி, மார்ச். 23-

பழனி நகர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் சட்டவிரோத மது விற்பனையைத் தடுக்க காவல்துறை மேற்கொண்ட அதிரடி சோதனையில் 700 மது பாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளனபழனி உட்கோட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில், இரவு நேரங்களில் சட்டவிரோதமாக மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவதாக பழனி துணை காவல் கண்காணிப்பாளர் தனஜெயன் அவர்களுக்கு ரகசியத் தகவல் கிடைத்தது.

இதனைத் தொடர்ந்து, டிஎஸ்பி தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு தீவிர சோதனை நடத்தப்பட்டது. இதில்

பழனி நகர் . தாலுகா. அடிவாரம் காவல் எல்லை ஆகிய பகுதிகளில் பதுக்கி வைத்து மது விற்பனையில் ஈடுபட்ட நபர்களை காவல்துறையினர் சுற்றி வளைத்தனர் இந்தச் சோதனையில், விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த சுமார் 700 மது பாட்டில்களை காவல்துறையினர் அதிரடியாகப் பறிமுதல் செய்தனர். இந்த நடவடிக்கையில் சார்பாய்வாளர்கள். கிருஷ்ணன், ரவிச்சந்திரன் மற்றும் காவலர்கள் தட்சிணாமூர்த்தி, கார்த்திகேயன் ஆகியோர் அடங்கிய குழுவினர் சிறப்பாகச் செயல்பட்டனர்.

சட்டவிரோத விற்பனையில் ஈடுபட்ட நபர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு, தற்போது தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காவல்துறையினரின் இந்த அதிரடி நடவடிக்கை அப்பகுதி மக்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது.பழனியில் சட்டவிரோத மது விற்பனைக்கு எதிராக காவல்துறை எடுத்துள்ள இந்த அதிரடி நடவடிக்கை பாராட்டுக்குரியது. பொதுமக்களின் அமைதியைக் காக்கவும், சட்ட விரோதச் செயல்களைக் கட்டுப்படுத்தவும் இது போன்ற சோதனைகள் அவசியமானவை என்ன பொதுமக்கள் கூறி வருகின்றனர்



■ நீலகிரி மாவட்டத்தில்மேரா யுவ பாரத் சார்பாக தியாகிகள் தினத்தை முன்னிட்டு உதகை அண்ணா ஸ்டேடியம் சுற்றுப்புறத்தை தூய்மைப்படுத்துதல் மரம் நடுதல் போன்ற செயல்களை மேரா யுவ பாரத் ரஞ்சித் குமார் தொடங்கி வைத்தார் நீலகிரி மாவட்ட சமூக தன்னார்வலர்கள் கூட்டமைப்பின் தலைவர் திரு சக்தி சுரேஷ் ரமணா, நீலகிரி கல்வி அறக்கட்டளையின் தலைவர் ஜாபர் மற்றும் அறக்கட்டளையின் குழுவினர், மாணவர்கள் கலந்து கொண்டனர், நிகழ்வின் நிறைவில் தியாகிகளின் தியாகங்களை என்றும் மறவாமல் இருக்கும் உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

# மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதலாவது சமவாய்ப்பிற்கு உட்படுத்தப்படுதல் பணிகள் நடைபெறவுள்ளது : தேனி மாவட்ட ஆட்சியர் தகவல்

தேனி மார்ச். 23-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் [EVMs / VVPATs] முதலாவது சமவாய்ப்பிற்கு உட்படுத்தப்படுதல் (1st Randomization) பணிகள் நடைபெறவுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் .ரஞ்ஜீத் சிங். தெரிவித்துள்ளார்.

தேனி மாவட்டத்தில் சட்டமன்றத்தொகுதி வாரியாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களையும், வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளையும் ஒதுக்கீடு செய்வதற்கு, முதல்நிலை பரிசோதனை நிறைவடைந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும் மற்றும் வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளும்



முதலாவது சமவாய்ப்பிற்கு உட்படுத்தப்படும் பணி 25.03.2026 அன்று காலை. 10.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங், தெரிவித்துள்ளார்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களையும், வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளையும் முதலாவது சமவாய்ப்பிற்குட்படுத்துதல் குறித்த விரிவான அறிவுறுத்தல்கள் குறித்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பற்றிய நடைமுறை நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன. இது இந்திய தேர்தல் ஆணையத்தின் https://www.eci.gov.in/evm-vvpat . என்ற வலைத்தளத்தில் இடம் பெற்றுள்ளது

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளின் முதலாவது சமவாய்பிற்குட்படுத்துதல் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திர மேலாண்மை முறை (ணிவிஷி) வாயிலாக மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அவர்களால் மேற்கொள்ளப்படும்.

முதலாவது நிறைவடைந்த பின்னர், தொகுதி சமவாய்பிற்குட்படுத்துதல் வாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளின் பட்டியல்கள் மாவட்ட தலைமையிடங்களிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளுடன் பகிரப்படும். இந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகள், தேர்தலில் பயன்படுத்துவதற்காக சம்மந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு / உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு வழங்கப்படும். இந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும், வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளும் அங்கீகாரம் பெற்ற தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அந்தந்த சட்டமன்ற தொகுதிக்குரிய காப்பறையில் பாதுகாப்பாக வைக்கப்படும்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை இறுதி செய்த பின்னர், முதலாவது சமவாய் பிற்குட்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளின் பட்டியல் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களுடனும் பகிரப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தெரிவித்துள்ளார்.

## சென்னையில் CNESS கான்ஷியஸ்னஸ் சூப்பர் ஆப் அறிமுக விழா





சென்னை மார்ச். 23-

சென்னை நடைபெற்ற அமெரிக்காவில் தலைமையிடமாக கொண்டு செயல்படும் CNESS இன்க் நிறுவனம், தனது விழிப்புணர்வு சார்ந்த டிஜிட்டல் சூழலமைப்பு மென்பொருளை சென்னையில் வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த அறிமுக விழா, சென்னையில் உள்ள தி ரெசிடென்சி டவர்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், CNESS சூழலமைப்பின் முக்கிய தளங்களான CNESS கான்ஷியஸ்னஸ் சூப்பர் ஆப் (B2C) மற்றும் CNESS-Works (B2B) ஆகியவை அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டன.

டிஜிட்டல் உள்கட்டமைப்பு மற்றும் கூட்டுச் சூழல் அமைப்புகளுக்கான புதிய பார்வையை வெளிப்படுத்தும் இந்த விழாவில், தொழில் துறை தலைவர்கள், புதுமையாளர்கள், ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் மற்றும் தொழிலதிபர்கள் பலர் கலந்து கொண்டனர்.

CNESS நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி ஆதிபென் போஸ் நந்திஜி, இந்த மென்பொருள் குறித்து பேசுகையில்,

"CNESS கான்ஷியஸ்னஸ் சூப்பர் ஆப் என்பது அர்த்தமுள்ள தொடர்புகள், விழிப்புணர்வான ஈடுபாடு மற்றும் சமூக முன்னேற்றத்தை உருவாக்கும் அடுத்த தலைமுறை சமூக தளமாக வடிவமைக்கப்பட்டுள்ளது" என்றார்.

மேலும், "CNESS-Works (B2B) தளம் நிறுவனங்களுக்கு நம்பகத்தன்மை, பிராண்ட் மதிப்பு மற்றும் உலகளாவிய இணைப்புகளை உருவாக்க உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது" என்றும் தெரிவித்தார்.

அமெரிக்காவில் தலைமையிடமாக இருந்தாலும், இந்த மென்பொருள் முழுக்க இந்தியாவில் உருவாக்கப்பட்டதாகவும், அதனால் தமிழகத்தில் அறிமுகம் செய்யப்பட்டது என்றும் அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக ஸ்ரீராம் கேப்பிட்டலின் டி.ஜி. ராஜன், தொழிலதிபர்கள் சுஷாந்த் சௌத்ரி, ஜெய அமரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



## வர்த்தக காஸ் சிலிண்டருக்கான ஒதுக்கீடு 50 சதவீதமாக உயர்வு

### மத்திய அரசு அனுமதி

புதுடெல்லி, மார்ச். 23-

ஈரான் போர் காரணமாக சமையல் காஸ் விநியோகம் தடைபட்டது. வீட்டு உபயோக சிலிண்டர்கள் விநியோகத்துக்கு முன்னுரிமை அளிப்பதற்காக வர்த்தக சிலிண்டர்கள் விநியோகத்துக்கு மத்திய அரசு கட்டுப்பாடு விதித்தது.

இதனால் நாடு முழுவதும் உள்ள உணவகங்களில் உணவுப் பொருட்கள் உற்பத்தி பாதிக்கப்பட்டது. தற்போது மக்கள் காஸ் சிலிண்டர்கள் முன்பதிவு செய்வது குறைந்து, வீட்டு உபயோக சிலிண்டர் விநியோகம் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது.

வர்த்தக சிலிண்டர்கள் விநியோகத்தில் 5ல் ஒரு பங்கு மீண்டும் தொடங்கிய பின்பு, மாநிலங்களுக்கு கூடுதலாக 10% ஒதுக்கீடு செய்யவும், பைப் மூலம் காஸ் விநியோகம் செய்யும் திட்டத்தை விரைவு படுத்தவும் மத்திய அரசு அனுமதி வழங்கியது.

இந்நிலையில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு கூடுதலாக 20% ஒதுக்கீடு செய்ய மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதன் மூலம் வர்த்தக சிலிண்டர்களுக்கான ஒதுக்கீடு 50% ஆக உயர்ந்துள்ளது. இதன் காரணமாக உணவு விடுதிகள், தொழிற்சாலை கேன்டீன்கள், உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள், சமுதாய உணவு கூடங்கள் ஆகியவற்றுக்கு காஸ் சிலிண்டர்கள் தாராளமாகக் கிடைக்கும்.

### சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு

# கீழ்பென்னாத்தூரில் வாக்காளர்களுக்கு தேர்தல் குறித்து விழிப்புணர்வு பிரச்சார பேரணி

### மாவட்ட தேர்தல் அலுவலர் தொடங்கி வைத்தார்





திருவண்ணாமலை, மார்ச்.23-

திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெவுள்ளதை முன்னிட்டு வாக்காளர்களுக்கு தேர்தல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தேர்தல் பிரச்சார விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் க.தர்ப்பகராஜ் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் வருகின்ற 23.04.2026 அன்று நடைபெறவுள்ளதை முன்னிட்டு வாக்காளர்களுக்கு தேர்தல் குறித்த விழிப்புணர்வு 100% ஏற்படுத்தும் வகையில் மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றது.

அதன்படி கீழ்பென்னாத்தூர் பேரூராட்சியில் உள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 600 க்கும் மேற்பட்ட மகளிர்கள் பங்கேற்ற தேர்தல் விழிப்புணர்வு பிரச்சார பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் க. தர்ப்பகராஜ் தொடங்கி வைத்து பேரணியில் பங்கேற்றார்.

கீழ்பென்னாத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் தொடங்கிய இப்பேரணியில் என் வாக்கு, என் உரிமை, உங்கள் வாக்கு உங்கள் எதிர்காலம், 100 சதவீதம் வாக்களிப்போம், நேர்மையாக வாக்களிப்போம் என்ற விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி மகளிர்கள் பேரூராட்சியின் முக்கிய வீதிகளில் சென்று பொதுமக்களுக்கு தேர்தல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள்.

மேலும் கீழ்பென்னாத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சுய புகைப்பட மையத்தில் புகைப்படம் எடுத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

அதனை தொடர்ந்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் க. தர்ப்பகராஜ் கீழ்பென்னாத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்ள வாக்குச்சாவடி மையத்தில் முன்னேற்பாடு பணிகள் குறித்தும், குடிநிர், கழிவறை, மின்விளக்கு போன்ற அடிப்படை வசதிகளை ஆய்வு மேற்கொண்டார்கள். தொடர்ந்து, கீழ்பென்னாத் தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலரின் அறை, மின்னணு இயந்திரங்கள் பாதுகாப்பு வைப்பறை உள்ளிட்டவையும், தேர்தல் முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா. இராம்பிரதீபன், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) தனபதி, கீழ்பென்னாத்தூர் தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் உதவி ஆணையர் (கலால்) செந்தில் குமார், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருவண்ணாமலை வடிவேலன், கீழ்பென்னாத்தூர் வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### பர்கூர் பகுதியில் பல்வேறு கட்சியிலிருந்து

# 75க்கும் மேற்பட்டோர் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்





கிருஷ்ணகிரி, மார்ச். 23-
கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்ற தொகுதி, பர்கூர் மத்திய ஒன்றியம் ஓரப்பம் ஊராட்சியில் அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த சந்திரன் தலைமையில் எர்ரப்பன், நாகராஜ், ராஜேந்திரன், சக்திவேல், பொன்னுசாமி, சந்திரன், ரி. சந்திரன், சீனிவாசன், சின்னப்பன், கிருஷ்ணவேணி, ஜமுனா, ரமேஷ் உள்ளிட்டோர் தங்களது ஆதரவாளர்களுடன் கட்சியிலிருந்து விலகி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர், பருகூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் எம் எல் ஏ முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்.மேலும் காவேரிப்பட்டினம் மேற்கு ஒன்றிய செயலாளர் சரவணன் தலைமையில், சாப்பரம் ஊராட்சி பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த வட்டார தலைவர் சரத்குமார் மற்றும் சந்தூர் ஊராட்சி தமிழக வெற்றிக் கழகம் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் சூரியா உள்ளிட்ட பலரும் இணைந்தனர்.

மொத்தமாக 75க்கும் மேற்பட்டோர், தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் தலைமையை ஏற்று திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட கழக நிர்வாகிகள், புதிய உறுப்பினர்களுக்கு வேட்டி மற்றும் சால்வை அணிவித்து உற்சாகமாக வரவேற்றனர். இந்நிகழ்வு பர்கூர் தொகுதியில் திமுகவிற்கு கூடுதல் வலுசேர்க்கும் வகையில் அமைந்துள்ளது.

# கொடைக்கானலில் இரண்டாவது நாளாக தொடரும் போக்குவரத்து நெரிசல்



கொடைக்கானல், மார்ச். 23-
கொடைக்கானல் இரண்டாவது நாளாக தொடரும் போக்குவரத்து நெரிசல் போதிய காவலர் இல்லாததால் போக்குவரத்து நெரிசலை சரி செய்ய முடியாமல் வாகன ஓட்டிகள் அவதி, சாலையில் 4 கிலோ மீட்டர் தூரம் வரை அணிவது நின்ற வாகனங்கள்....

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலுக்கு பல்வேறு பகுதிகளில் இருந்தும் தினம் தோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல்வது வழக்கமான ஒன்றாகும் .

இந்த நிலையில் ரம்ஜான் மற்றும் வார விடுமுறையின் காரணமாக கொடைக்கானலில் அதிகமான சுற்றுலாப் பயணிகள் குவிந்து வருகின்றனர் போக்குவரத்து நெரிசல் அதிகம் ஏற்படும் பகுதியான மூஞ்சிகல், அரசு பள்ளி, கல்லறை மேடு போன்ற பகுதிகளில் போலீசார் இல்லாததால் போக்குவரத்து நெரிசல் அதிகரித்து காணப்படுகிறது

குறிப்பாக கோக்கர்ஸ் வாக், பசுமை பள்ளத்தாக்கு , அப்பர் லேக், தூண் பாறை, குணா குகை, மோயர் சதுர்க்கம், போன்ற சுற்றுலா தாங்களுக்கு செல்வதற்கு காலை முதலே சுற்றுலா பயணிகள் ஆர்வம் காட்டி வருவதால் சுற்றுலா தளங்களுக்கு செல்லும் சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது.

தொடர்ந்து பண்டிகை விடுமுறை மற்றும் வார விடுமுறை நாட்களில் கொடைக்கானல் சுற்றுலாத்தலங்கள் முழுவதுமே போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வரக்கூடிய நிலையில் கொடைக்கானலில் பண்டிகை காலங்களில் அதிக காவலர்களை பணியமர்த்த வேண்டும் என்று கோரிக்கையும் தொடர்ந்து எழுந்து வருகிறது



### 2026 தேர்தல் முன்னேற்பாடு:

# மல்லப்பாடியில் பூத் நிர்வாகிகள் சந்திப்பில் MLA மதியழகன் ஆலோசனை

கிருஷ்ணகிரி, மார்ச். 23-
கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பர்கூர் மத்திய ஒன்றியம், மல்லப்பாடி ஊராட்சியில் 2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு கழக ஆக்கப்பணிகள் மற்றும் பூத் நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன், விலிகி கலந்து கொண்டு கழக நிர்வாகிகளுடன் விரிவான ஆலோசனைகளை மேற்கொண்டார்.

கூட்டத்தில், வரவிருக்கும் 2026 சட்டமன்ற தேர்தலை வெற்றிகரமாக சந்திக்க கழக அமைப்புகளை வலுப்படுத்துவது, ஒவ்வொரு பூத் நிலையத்திலும் நிர்வாகிகளை உறுதிப்படுத்துவது, வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு மற்றும் புதிய வாக்காளர்களை சேர்த்தல் போன்ற முக்கிய அம்சங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. மேலும், அடிப்படை மட்டத்தில் கட்சியின் செயல்பாடுகளை தீவிரப்படுத்த வேண்டிய அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

அதேபோல், பொதுமக்களுடன் நெருக்கமான தொடர்பு பேணி, அரசு நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் நிர்வாகிகள் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் எனவும் விலிகி அறிவுறுத்தினார். மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ், மாவட்ட பொருளாளர் கதிரவன் உள்ளிட்ட ஒன்றிய, ஊராட்சி மற்றும் பூத் நிலை கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டனர்.

# போத்தாபுரத்தில் விநாயகர்-மாரியம்மன் - காளியம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம்

### பால்குட ஊர்வலத்துடன் பக்தர்கள் திரளாக பங்கேற்பு





கிருஷ்ணகிரி, மார்ச்.23-
கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் அருகே உள்ள போத்தாபுரம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ மாரியம்மன், ஸ்ரீ காளியம்மன் ஆலயத்தில் நூதன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக பெருவிழா பக்தி உற்சாகத்துடன் நடைபெற்று வருகிறது. விழாவை முன்னிட்டு நடைபெற்ற பால்குட ஊர்வலத்தில் ஏராளமான பெண்கள்,பக்தர்கள் கலந்து கொண்டு ஆன்மிக உற்சாகத்தை வெளிப்படுத்தினர்.


விழா தொடக்கமாக முளைப்பாரி இடுதல், கொடியேற்றம், கங்கனம் கட்டுதல், கங்கை அழைப்பு போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தொடர்ந்து சுவாமி கரிகோலம் மற்றும் முளைப்பாரி அழைப்பு நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து நடைபெற்ற பால்குட ஊர்வலத்தில் பெண்கள், இளைஞர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்று, ஆலயத்திற்கு புனித நீர் மற்றும் பால் கொண்டு வந்து பக்தி முழக்கங்களுடன் ஊர்வலமாக வந்தனர். அடுத்து விக்னேஸ்வர பூஜை, தேவதா அனுக்ஞை, மஹா சங்கல்பம், கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், லட்சுமி ஹோமம் உள்ளிட்ட பல்வேறு ஹோமங்கள் நடைபெற்றன. மேலும் வாஸ்து பூஜை, அங்குரார்ப்பணம், யாகசாலை பூஜைகள், 108 மூலிகை ஹோமம், பூர்ணாஹுதி, தீபாராதனை போன்ற ஆன்மிக நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற்றன.

முக்கிய நாளான புதன்கிழமை காலை 9.00 மணி முதல் 10.30 மணி வரை ரிஷப லக்னத்தில் ஆலய கோபுரம் மற்றும் மூலவர் திருவிமானங்களுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. தொடர்ந்து மகா அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை, பக்தர்களுக்கான சிறப்பு தரிசனம் மற்றும் மகா அன்னதானம் நடைபெறும்.

இந்த விழாவில் கலந்து கொண்ட பக்தர்கள் தங்கள் வேண்டுதல்கள் நிறைவேற வேண்டி வழிபாடு செய்தனர். போத்தாபுரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து ஏராளமான மக்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டு ஆன்மிக அனுபவத்தை பெற்றனர்.

விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் போத்தாபுரம் ஊராட்சி மக்கள் மற்றும் 17 கூம்பு கவுண்டர் குடும்பத்தினர் இணைந்து சிறப்பாக செய்து வருகின்றனர்.

# லெபனான் மீது இஸ்ரேல் தீவிர தாக்குதல் இதுவரை 1,000க்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு



டெல் அவிவ், மார்ச்.23-
லெபனான் நாட்டின் மீது இஸ்ரேல் ராணுவம் தீவிர தாக்குதல்களை நடத்தி வருகிறது. இதன் காரணமாக லெபனானில் இதுவரை 1,000க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

லெபனானின் ஹிஸ்புல்லா கிளர்ச்சிப் படைக்கு ஈரான் ராணுவம் ஆயுத உதவிகளை வழங்கி வருகிறது. இந்தச் சூழலில் ஈரானுக்கு ஆதரவாக கடந்த 2ம் தேதி ஹிஸ்புல்லா படை வீரர்கள், இஸ்ரேலை குறி வைத்து ஏராளமான ஏவுகணைகளை வீசினர். இதைத் தொடர்ந்து லெபனான் மீது இஸ்ரேல் ராணுவம் தாக்குதலைத் தொடங்கியது.

லெபனான் தலைநகர் பெய்ரூட் மற்றும் பல்வேறு நகரங்களில் உள்ள ஹிஸ்புல்லா முகாம்களை இஸ்ரேல் போர் விமானங்கள் தொடர்ச்சியாக குண்டுகளை வீசி அழித்து வருகின்றன. இஸ்ரேல் போர் விமானங்கள் நேற்று லெபனான் தலைநகர் பெய்ரூட்டின் தெற்குப் பகுதியில் சக்திவாய்ந்த குண்டுகளை வீசின. இதில் 20 பேர் உயிரிழந்தனர். 60க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இஸ்ரேலின் வான் வழி, தரைவழி தாக்குதல்களில் லெபனான் முழுவதும் இதுவரை 1,000க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 2,600க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இதுதொடர்பாக சர்வதேச அரசியல் நோக்கர்கள் கூறியதாவது: பாலஸ்தீனத்தை சேர்ந்த ஹமாஸ் கிளர்ச்சிக் குழுவுக்கு ஈரான் ராணுவம் ஆயுத உதவிகளை வழங்கி வந்தது. கடந்த 2023 அக்டோபர் முதல் 2025 அக்டோபர் வரை இஸ்ரேல் ராணுவம், ஹமாஸ் குழுவுக்கு இடையே 2 ஆண்டுகள் போர் நடைபெற்றது. இந்தப் போரில் பாலஸ்தீனத்தின் காசா பகுதி முழுமையாக அழிக்கப்பட்டது. ஹமாஸ் கிளர்ச்சிக் குழு நசுக்கப்பட்டது. மேலும் காசாவின் பல்வேறு பகுதிகளை இஸ்ரேல் ராணுவம் ஆக்கிரமித்தது.

தற்போது லெபனானின் ஹிஸ்புல்லா கிளர்ச்சிக் குழுவின் மீதும் இஸ்ரேல் ராணுவம் தீவிர தாக்குதல்களை நடத்தி வருகிறது. அந்த குழுவின் மூத்த தலைவர்கள், நூற்றுக்கணக்கான வீரர்கள் உயிரிழந்துள்ளனர். தற்போதைய போரின் மூலம் தெற்கு லெபனானின் பெரும் பகுதியை இஸ்ரேல் ராணுவம் ஆக்கிரமிக்கும். இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்

# கடலூர், அரியலூர் மாவட்டங்களை இணைக்கும் பாலம் கட்டும் பணி முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வருவதால், மக்கள் மகிழ்ச்சி, நன்றி



பெரம்பலூர், மார்ச். 23-
கடலூர், அரியலூர் மாவட்டங்களை இணைக்கும் சவுந்திரசோழபுரம் கோட்டைக்காடு வெள்ளாற்றின் குறுக்கே, ஏழு ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டிருந்த பாலம் கட்டும் பணி முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வருவதால், அப்பகுதி மக்கள் மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவித்துள்ளனர்.

இந்த பாலம் இரு மாவட்ட கிராம மக்களிடையே போக்குவரத்து நேரத்தைக் குறைத்து, அத்தியாவசியத் தேவைகளுக்கு பெரிதும் உதவும். பல ஆண்டுகளாக, குறிப்பாக மழைக் காலங்களில் வெள்ளாற்றில் ஏற்படும் வெள்ளப்பெருக்கால் மக்கள் அரியலூர்கடலூர் போக்குவரத்தில் கடும் சிரமத்தை சந்தித்து வந்தனர். நீண்ட போராட்டத்திற்குப் பிறகு பாலம் கட்டி முடிக்கப்பட்டதால், அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கனவு நிறைவேறியுள்ளது.

தற்போது இந்த பாலம் போக்குவரத்திற்கு திறந்துவிடப்பட்டுள்ளதால், மக்கள் நிம்மதியடைந்துள்ளனர்.

அரியலூர் மாவட்டத்தையும் , கடலூர் மாவட்டத்தையும் இணைக்கும், செந்துறை ஒன்றியம் கோட்டைக்காடு வெள்ளாற்றுப் பாலம் பலநாள் கோரிக்கையாக இருந்து வந்தது. இந்தக் கோரிக்கை தமிழக அரசால் நிறைவேற்றப் பட்டதற்குப் போராட்டக்குழுவினர் பாலத்தை இன்று (22 3 2026) போராட்டக் குழுத் தலைவர் மு. ஞானமூர்த்தி தலைமையில் பார்வையிட்டு மேம்பாலத்திற்காக குரல் கொடுத்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தனர். மேலும் கோட்டைக்காடு பகுதியில் துருபிடிக்காத தடுப்பு அமைத்துள்ளனர். அதில் சிமெண்ட் காங்கிரட் சரியாக போடவில்லை. இரண்டு முறை மழைபெய்தால் தடுப்பு சாய்ந்துவிடும் நிலையில் உள்ளது. மேலும் பாலத்தின் மேற்கு புறம் உள்ள அணுகுசாலை காங்கிரட் தடுப்பு சுவர் முடியும் இடத்தில் இந்த மழையில் அறுத்துள்ளது. இதிலும் அணுகு சாலை சேதமடையும் நிலையில் உள்ளது. எனவே இருபுரமும் அணுகுசாலையை மேலும் தரமானதாக போடவேண்டும் என போராட்டகுழு கேட்டுக்கொள்கிறது. கோட்டைக்காடு மேம்பாலத்தில் 2 தேனீக்கள் கூடுகட்டிக்கொண்டு பாலத்தில் செல்பவர்களை தாக்குகிறது. அதை அப்புறப்படுத்த வேண்டும் என போராட்டுக்குழு கேட்டுக்கொள்கிறது.

2013 ம் ஆண்டு மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் முதல் அறிவிப்பு செய்த தமிழக முதல்வர் மாண்புமிகு ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கும் மேம்பாலத்திற்கு 1972018ல் சுமார் ரூ. 11,10,00,000 (பதினோறு கோடியே பத்து லட்சம்) அனுமதி அளித்த முன்னாள் தமிழக முதல்வர் மாண்புமிகு எடப்பாடி பழனிச்சாமி அவர்களுக்கும், அணுகு சாலைக்கு சுமார் ரூ. 5,30, 00,000 (ஐந்துகோடியே முப்பது லட்சம்) அனுமதி அளித்த தற்போதைய தமிழக முதல்வர் மாண்புமிகு மு. க. ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றி!

மேலும் இந்த பாலம் அமைய குரல் கொடுத்து கோரிக்கை எழுப்பிய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கூர் விசுவநாதன், வசிஸ்டபுரம் நாராயணன், இடையக்குறிச்சி கிருஷ்ணமூர்த்தி , அழகாபுரம் தில்லை காந்தி, ஆண்டிமடம் எஸ். சிவசுபிரமணியம், பேராசிரியர் தீரன், காடுவெட்டி குரு. ஆர். டி. ராமச்சந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொல். திருமாவளவன், பொன்னுசாமி , திட்டக்குடி சட்டமன்ற உறுப்பினர்(அமைச்சர்)வே. கணேசன், விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் கலைச்செல்வன் ஆகியோருக்கு நன்றி மேலும் 2013ல் மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அறிவித்த செந்துறை கோட்டைக்காடு பெண்ணாடம் சாலை தரம் உயர்த்தி போடப்படும், கோட்டைக்காடு வெள்ளாற்றில் பாலம் கட்டப்படும் என அறிவித்துக் கிடப்பில் போடப்பட்ட நிலையில் இந்தத் திட்டத்திற்கு அழுத்தம் கொடுத்து மீண்டும் அனைத்துக் கட்சிகளின் சார்பில் போராட்டம் நடத்தி அழுத்தம் கொடுத்த போராட்டக் குழுத் தலைவர் மு. ஞானமூர்த்தி, பாமக. சம்பேரி ஆடியபாதம். பாசிக்குளம் திருஞானம், தவ க. சின்னதுரை ஆசிரியர், விசிக. பாலசிங்கம், அதிமுக எழிலரசன் மற்றும் திமுக நிருவாகிகள் மாநில கொள்கைப் பரப்பு துணை செயலாளர் ச. அ. பெருநற்கிள்ளி பெ. அகத்தியர், ஆர். விசுவநாதன், மா. சிவப்பிரகாசம், மு. சிவப்பிரகாசம் , எம். கே. பரமசிவம், இளங்கோவன், கோதண்டபாணி, ம. குமரவேல், எம். ஜி. சேகர், கோட்டைக்காடு செல்வராசு, கோ. ரவிச்சந்திரன் , மு. ராமலிங்கம், க. இராமசாமி , ர. ஆனந்தராஜ், தாமோதரன், சுரேஷ் , கே. வி. ராசேந்திரன், ச. நல்லதம்பி, பொன். கிருஷ்ணமூர்த்தி , சுப்பிரமணியன், ராசாங்கம், ராசேந்திரன், குமாரசாமி, ராஜவேல், காசிநாதன், காங்கிரஸ் நிருவாகிகள் இரா. ரத்தினசபாபதி, குளஞ்சிநாதன், செந்தில், தமிழர் வாழ்வுரிமைக் கட்சி நிருவாகிகள் எஸ். கே. தனவேல், செந்தில். பாமக நிருவாகிகள் இர. கதிர்வேல், கோட்டைக்காடு செல்வராசு, மதுரா செல்வராசு, புக்குழி ராமச்சந்திரன் , கோட்டைக்காடு க. குமார், க. சேகர், ரா. விஜயகுமார், ஆர். செல்வராசு, தேமுதிக சுப்பிரமணியன், திக விடுதலை நீலமேகம், சிவக்குமார், தனபால், ராசேந்திரன் , தமாகா சக்திவேல், தமிழர் நீதிக்கட்சி இளங்கோவன் ஆசி ரியர்(ஓ ய்வு) . சிபிஐ சிவக்குமார் மற்றும் இந்த போராட்டத்தில் கலந்துகொண்டு கோரிக்கையை வென்றெடுத்த அனைத்துக் கட்சி நிருவாகிகள் மற்றும் பொதுமக்கள் , இந்த செய்தியை அரசுக்கும், உலகுக்கும் எடுத்துச் சென்ற ஊடகத்துறையைச் சார்ந்த பத்திரிக்கை நிருபர்கள் , தொலைக் காட்சி நிருபர்கள் , அரசு அதிகாரிகள், காவல் துறை நண்பர்கள் அனைவருக்கும் போராட்டக்குழு,

கோட்டைக்காடு வெள்ளாற்றுப் பாலம் கட்டகோரும் அனைத்துக் கட்சி கூட்டமைப்பு மற்றும் பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்.

# அதிகாரியைத் தற்கொலைக்குத் தூண்டியதாகப் புகார்

## பஞ்சாப் அமைச்சர் லால்ஜித் சிங் புல்லர் ராஜினாமா



சண்டிகர், மார்ச். 23-

பஞ்சாபில் ஒரு அரசு அதிகாரியைத் தற்கொலைக்குத் தூண்டியதாக புகார் எழுந்ததையடுத்து, அமைச்சர் லால்ஜித் சிங் புல்லர் நேற்று தனது பதவியை ராஜினாமா செய்தார்.

பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸில் உள்ள மாநிலக் கிடங்கு கழக மேலாளர் ககன்தீப் சிங் ரந்தாவா தற்கொலை செய்து கொண்டார். இந்நிலையில், ரந்தாவா பேசும் வீடியோ சமூக வலைதளங்களில் நேற்று வெளியானது. அதில், தான் விஷம் அருந்திவிட்டதாகவும், அமைச்சர் லால்ஜித் சிங் புல்லர் தனக்கு தொல்லை கொடுத்ததாகவும் குற்றம் சாட்டியிருந்தார்.

இந்நிலையில், முதல்வர் பகவந்த் மான் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அமைச்சர் லால்ஜித் சிங் புல்லர் நேற்று தனது பதவியை ராஜினாமா செய்தார். தரன் தரன் மாவட்டத்தில் உள்ள பட்டி தொகுதி எம்எல்ஏ.வான புல்லர், தனது முகநூல் பதிவில், ''என் மீதான குற்றச்சாட்டில் உண்மை இல்லை. எனது கட்சி எப்போதும் உண்மையின் பக்கம் நிற்கும். எனவே என் மீதான குற்றச்சாட்டுகள் முறையாக விசாரிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறேன். இந்த விசாரணை முடியும் வரை, எனது ராஜினாமாவை ஏற்குமாறு கட்சியையும் முதல்வரையும் கேட்டுக் கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து விசாரணை நடத்துமாறு தலைமைச் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளதாக முதல்வர் பகவந்த் மான் தெரிவித்துள்ளார். நியாயமான விசாரணை நடைபெற வேண்டும் என்பதற்காகவே பதவி விலகுமாறு அமைச்சரை கேட்டுக் கொண்டதாக மான் கூறினார்.

புல்லரின் ராஜினாமா குறித்த செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த மான், ''இதன் பின்னணியில் உள்ள காரணங்கள் என்ன என்பது விசாரணையில் தெரிய வரும். விசாரணைக்கு முன்னதாகவே அமைச்சரின் ராஜினாமாவை நாங்கள் பெற்றுக் கொண்டோம். இதனால் விசாரணையில் யாரும் தலையிடவோ அல்லது அழுத்தம் கொடுக்கவோ முடியாது'' என்றார்.

இதுகுறித்து சிரோமணி அகாலி தளத் தலைவர் பிக்ரம் சிங் மஜித்தியா கூறும்போது, ''புல்லர் தனது உதவியாளருக்கு டெண்டர் வழங்குமாறு ரந்தாவாவுக்கு அழுத்தம் கொடுத்துள்ளார். ஆனால் அவர் தகுதியான ஒருவரைத் தேர்ந்தெடுத்துள்ளார்.

இதையடுத்து, ரந்தாவா அமைச்சர் வீட்டுக்கு அழைக்கப்பட்டு தாக்கப்பட்டுள்ளார். மேலும் ரூ.10 லட்சம் லஞ்சம் வாங்கியதாக ஒப்புக்கொள்ளுமாறு அவரை வற்புறுத்தியதாகக் கூறப்படுகிறது. எனவே இதுகுறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என வலியுறுத்தினார்.




# தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட செயற்குழு கூட்டம்

சிவகங்கை, மார்ச்.23-

தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்ட இரண்டாவது செயற்குழு கூட்டம் காரைக்குடி நேஷனல் கேட்டரிங் கல்லூரியில் நடைபெற்றது. துணைத் தலைவர் ராசு அறிவியல் பாடல் பாடினார். காரைக்குடி கிளைச் செயலாளர் டென்சிங் அருள்ராஜ் அனைவரையும் வரவேற்றார். இக்கூட்டத்திற்கு தலைமை வகித்த மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி கூட்டப் பொருள் குறித்து விளக்கினார். மாநிலமேனாள் தலைவர் பேராசிரியர் மோகனா, மாநில செயலாளர் பாலகிருஷ்ணன், மாநில செயற்குழு உறுப்பினர் முனைவர் கோபிநாத்பார்வையாளர்களாக கலந்து கொண்டனர். மாநில துணைத்தலைவரும், சிவகங்கை மாவட்ட பொறுப்பாளருமான காந்தி சிறப்பு அழைப்பாளராக இக்கூட்டத்தில் பங்கேற்றார். மாவட்ட செயலாளர் பிரபு கடந்த மூன்று மாதங்களில் மாவட்டமற்றும் கிளை செயல்பாடுகள், துளிர் திறனறிதல் தேர்வு முடிவுகள், மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் குறித்து பேசினார். செயற்குழு உறுப்பினர்கள் விக்டர் சையது ராஜ சரவணன் பாலசுப்பிரமணியன்கவிஞர் தமிழ்க்கனல் நாகரத்தினம் ஆகியோர் கூட்டப்பொருள் குறித்து விவாதித்தனர். மாவட்ட பொருளாளர் சாஸ்தா சுந்தரம் வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தார். அதிக உறுப்பினர்களை சேர்ப்பது, மகளிர்கான சமம் அமைப்பை மாவட்டம் முழுவதும் பரவலாக்குவது, மாநில கட்டிட நிதி ஆதாரத்தை திரட்டுவது, வரும் சட்டமன்றத் தேர்தலில் நேர்மையான மற்றும் நூறு சதவீத வாக்களிப்பை உறுதி செய்ய விழிப்புணர்வு முகாம்கள் நடத்துவது,அறிவியல் இயக்க மாவட்ட அலுவலகத்திற்கு சொந்த கட்டிடம் கொண்டுவர முயற்சிகளை மேற்கொள்வது, துளிர் இல்லங்கள் அமைப்பது உள்ளிட்ட தீர்மான ங்கள்நிறைவே ற்றப்பட்டன. அறிவொளி முருகானந்தம் நன்றியுரை கூறினார்

# இளம் வாக்காளர்களைக் கவர மார்க்சிஸ்ட் தேர்தல் வாக்குறுதி

## மேற்கு வங்க தேர்தல்



கொல்கத்தா, மார்ச்.23-

மேற்கு வங்கத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினரும், கட்சியின் மூத்த தலைவருமான சமிக் லஹிரி நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இளைஞர்களின் வாக்குகளைக் குறிவைத்து அதிக அளவு வேலைவாய்ப்புகளை உருவாக்குவோம் என்று தேர்தல் அறிக்கையில் அறிவிக்க இருக்கிறோம். இந்தத் தேர்தலில் ஏராளமான புதிய வாக்காளர்கள் பட்டியலில் இணைந்துள்ளனர். அவர்களைக் குறிவைத்தே எங்களது தேர்தல் அறிக்கை இருக்கும்.

கடந்த 15 ஆண்டு காலமாக திரிணமூல் காங்கிரஸ் ஆட்சியில் மாநிலம் பின்னோக்கிச் சென்றுவிட்டது. வேலைவாய்ப்பின்மை தலைவிரித்து ஆடி வருகிறது. மாநிலத்தில் வேலைவாய்ப்பே இல்லை. பணித்திறன் மிக்க இளைஞர்கள் மாநிலத்தில் இருந்தும் அவர்களுக்கு உரிய வேலை கிடைக்கவில்லை. தேர்தல் அறிக்கையில், மாற்று வேலைவாய்ப்புக் கொள்கையை அறிவிக்க இருக்கிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2), பூத் டிஜிட்டல் ஏஜென்ட்(BDA), பூத் ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றது





தாம்பரம் மார்ச். 23-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்ற தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2), பூத் டிஜிட்டல் ஏஜென்ட்(BDA), பூத் ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தில் காஞ்சி வடக்கு மாவட்ட கழகச் செயலாளர், மாண்புமிகு குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் 2026சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார் இந்த நிகழ்ச்சியில் காஞ்சி வடக்கு மாவட்ட துணை செயலாளர், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதி இளம்சுருதி, மண்டலக்குழுத் தலைவர்கள் எஸ்.இந்திரன், டி.காமராஜ், வே.கருணாநிதி, பகுதி கழக செயலாளர்கள் எஸ்.சேகர், இரா.சுரேஷ், ஆ.நடராஜன், த.ஜெயகுமார், ஒன்றிய செயலாளர் ஜி.கே. ரவி, மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் ஆர்.எஸ். கிருத்திகாதேவி, தலைமை கழக பேச்சாளர்கள் கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகர பாண்டியன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆதிமாறன், தாம்பரம் மாநகர நிர்வாகிகள் வ.விஜயரங்கன்,பொன். சதாசிவம், பொதுக்குழு உறுப்பினர்கள் க.தேவேந்திரன், ஆர்.எஸ். சங்கர்,, ஊராட்சி மன்ற தலைவர்கள் மு.வேல்முருகன், ஜனனி சுரேஷ்பாபு வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் நிர்வாகிகள், பகுதி வட்ட கழக நிர்வாகிகள், BLA-2, BDA, பூத் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



# காமராஜபுரம் மஸ்ஜிதே அன்வரி மள்ளிவாசலில் ரம்ஜான் சிறப்பு தொழுகை

தாம்பரம் மார்ச். 23-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த காமராஜபுரத்தில்

இஸ்லாமியர்களின் ஐம்பெரும் கடமைகளில் குறிப்பிடத்தக்க ஒன்று ரமலான் மாத நோன்பு. நோன்பின்போது அவர்கள் அதிகாலை முதல் மாலை வரை உணவு உண்ணாமல், நீர் அருந்தாமல் நோன்பு இருப்பார்கள்.

ரமலான் மாதம் முதல் நாள் தொடங்கி 30 நாட்க ளும் கடுமையாக நோன்பு கடைபிடிக்கும் முஸ்லிம்கள், மற்றொரு கடமையான ஏழை எளியோருக்கு ஜகாத் உதவிகளை வழங்கி வருவார்கள்.

ரமலான் 30 நாள் நோன்பு முடிவடைந்த பிறகு, ஷவ்வால் மாதத்தின் முதல் நாளில் ரமலான் பண்டிகை கோலாகலமாக கொண்டாடப்படும். அதன்படி காமராஜபுரம் மஸ்ஜிதே அன்வரி பள்ளிவாசலில் நடைபெற்ற ரம்ஜான் சிறப்பு தொழுகையில் ஏராளமானோர் கலந்து கொண்டனர் இதனைத்தொடர்ந்து இஸ்லாமிய பெருமக்கள் ஒருவரை ஒருவர் ஆரத்தழுவியும், கை கொடுத்தும் ரம்ஜான் வாழ்த்துக்கள் கூறி மகிழ்ச்சியை வெளிப்படுத்தி னார்கள் தமுமுக - மமக மாவட்ட தலைவர் எஸ்.கே.ஜாஹீர் உசேன் அறிவுத்தின்படி செங்கல்பட்டு வடக்கு மாவட்ட உலமாக்கள் அணி செயலாளர் சையது இப்ராஹிம், மாவட்ட துணைச் செயலாளர் ஐ.ஜமால், மாவட்ட இளைஞரணி செயலாளர் ரஂபிக், பகுதி தலைவர் நாசர் பாஷா, பகுதி மமக செயலாளர் நுரல் அமீர், தமுமுக பகுதி செயலாளர் இம்தியாஸ் மற்றும் பகுதி நிர்வாகிகள் மஸ்ஜிதே அன்வரி பள்ளிவாசல் நிர்வாகிகள் இஸ்லாமியர் பெருமக்கள் அனைவருக்கும் கலந்து கொண்டனர்

# எரிபொருள் விலை அதிகரிப்பால் விமான பயணிகள் கட்டணம் உயரும்

## ஒன்றிய அமைச்சர் சூசகம்

விசாகப்பட்டினம், மார்ச்.23-

விமான எரிபொருள் விலை உயர்வு காரணமாக விமானக் கட்டணங்கள் உயரக்கூடும் என ஒன்றிய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ராம் மோகன் நாயுடு தெரிவித்துள்ளார். மேற்கு ஆசியப் பகுதியில் நிலவி வரும் போர்ச் சூழல் காரணமாக உலகளாவிய எரிசக்தி விநியோகத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை இந்தியா வெற்றிகரமாக எதிர்கொண்டு வருவதாக ஒன்றிய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி மக்களவையில் தெரிவித்தார்.இந்திய செய்திகள்



இந்த நிலையில், ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய ஒன்றிய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ராம் மோகன் நாயுடு, 'விமான எரிபொருளின் விலையானது ஒவ்வொரு மாதமும் முதல் தேதியன்று நிர்ணயிக்கப்படுகிறது. தற்போது நிலவி வரும் சூழலால் ஏற்பட்டுள்ள எரிபொருள் விலை உயர்வின் தாக்கம் ஏப்ரல் 1ம் தேதி முதல் தெரியவரும். குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் பதற்றமான சூழலில், விமானங்களை பாதுகாப்பாக இயக்குவதற்கே முன்னுரிமை அளிக்கிறோம். விமானப் போக்குவரத்துத் துறை, வெளியுறவுத் துறை மற்றும் பெட்ரோலியத் துறை அமைச்சகங்கள் ஒன்றிணைந்து ஆலோசனைகளை மேற்கொண்டு சரியான முடிவை எடுக்கும். இந்த விலை உயர்வு பாதிப்பு விமான நிறுவனங்களின் செயல்பாடுகளையோ அல்லது பயணிகளையோ பாதிக்கக்கூடாது என்பதே அமைச்சகத்தின் நோக்கம்' என்றார்.

இதற்கிடையே, வளைகுடா நாடுகளில் நிலவும் புவிசார் அரசியல் பதற்றங்களால் ஏடிஎப் விலை உயர்ந்து வருவதைத் தொடர்ந்து, ஏர் இந்தியா நிறுவனம் உள்நாட்டு மற்றும் சர்வதேச வழித்தடங்களில் எரிபொருள் கூடுதல் கட்டணத்தை படிப்படியாக உயர்த்தி வருகிறது. அதேபோல், ஆகாசா ஏர் நிறுவனமும் 15ம் தேதி நள்ளிரவு முதல் அமலுக்கு வரும் வகையில் உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான முன்பதிவுகளுக்கு புதிய எரிபொருள் கூடுதல் கட்டணத்தை அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது

# தேவகோட்டை திமுக வழக்கறிஞர் ஆசைத்தம்பி இல்லத்துக்குச் சென்று குடும்பத்தினரை சந்தித்த ஓபிஎஸ்

## ஓ.பன்னீர்செல்வம் தென்மாவட்டங்களில் தேர்தல் பரப்புரையை மேற்கொண்டு வருகிறார்



தேவகோட்டை மார்ச். 23-

தூத்துக்குடி . இராமநாதபுரம் . சிவகங்கை உள்ளிட்ட பல பகுதிகளில் தேர்தல் பரப்புரை கூட்டங்களில் பங்கேற்று வரும் ஓபிஎஸ் நேற்று முன்தினம் சிவகங்கை மாவட்டத்திற்கு வருகைதந்தார்...

அங்கே சிவகங்கை மாவட்ட திமுகவினர் உற்சாகமாக வரவேற்பளித்தனர்...

தமிழ்நாட்டு அரசியலில் தேர்தல் களம் சூடு பிடித்த நிலையில் தேவகோட்டை நகரில் தேர்தல் பிரச்சாரத்துக்கு வந்த மேனாள் முதல்வர் ஓ பன்னீர்செல்வம் மற்றும் நாடாளுமன்ற மேனாள் உறுப்பினர்களான மதுரை கோபாலகிருஷ்ணன்

தேனி ஓ.பி.ரவீந்திரநாத் . சட்டமன்ற மேனாள் உறுப்பினர் உசிலை அய்யப்பன் ஆகியோரும் நேற்று இரவு தேவகோட்டை வழக்கறிஞர் விஎம். ஆசைத்தம்பி இல்லத்திற்கு சென்று அங்குள்ள அனைவரிடமும் நலம் விசாரித்து புகைப்படம் எடுத்துக்கொண்டனர் ...

உற்சாகமான இந்த நிகழ்ச்சியில் . சிவகங்கை மாவட்ட திமுக செயலாளர். கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர் பெரியகருப்பன், மேனாள் அமைச்சர் தென்னவன், மேனாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓபி.ரவீந்திரநாத், கோபாலகிருஷ்ணன், சட்டமன்ற மேனாள் உறுப்பினர் ஐயப்பன், ஆவின் மேனாள் சேர்மன் கரு. அசோகன்,

ராமநாதபுரம் அழகர்சாமி, திருப்பூர் கனிஷ்கா சிவகுமார் தேவகோட்டைநகரசெயலாளர் பெரி.பாலா என்ற பாலமுருகன் அம்பலம் , தேவகோட்டை வடக்கு திமுக ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் பூபாளசிங்கம் . மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ராஜ்குமார், காரைக்குடி ருக்மா சரவணன், கண்ணங்குடி பாண்டி, தேவகோட்டை பசும்பொன் உறவின்முறை செயலாளர் சிதம்பரம், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்...

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161